# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:13** **தேதி:27.12.2014**

## காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிக்காதே!!!!!

அன்பார்ந்த தோழர்களே,

இந்திய நாட்டு மக்களுக்கு பொதுத்துறையில் உள்ள காப்பீட்டு நிறுவனங்கள் மிகச்சிறந்த சேவையினை கொடுத்து வருகின்றனர். அந்த துறையில் தனியார்களையும், பன்னாட்டு நிறுவனங்களையும் நுழைத்து இதனை சீரழிக்க வேண்டும் என்று மத்தியில் ஆண்டு வந்த, வரும் காங்கிரஸ் மற்றும் BJP அரசாங்கங்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வந்தன. இதுவரை பொதுத்துறை நிறுவனங்களுக்கு போட்டியாக இந்தியாவில் நுழைந்த தனியார் நிறுவனங்கள் இவற்றுடன் போட்டி போட முடியாமல் ஓடிப்போய் விட்டன என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் தனியார் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் முந்தைய காங்கிரஸ் அரசு காப்பீட்டு துறையில் 26 சதவிகிதமாக இருந்த அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவிகிதமாக உயர்த்த முயற்சி செய்தது. ஆனால் BJP உள்ளிட்ட எதிர்கட்சிகள் அன்றைக்கு எதிர்த்த காரணத்தால் அதனை அமுலாக்க அவர்களால் முடியவில்லை.

ஆனால் இன்று பெரு முதலாளிகளால் வளர்ச்சியின் நாயகன் என்று வர்ணிக்கப்படும் மோடி தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன், தான் எதிர்த்த அதே அந்நிய நேரடி முதலீடு அதிகரிப்பை, தற்போது BJP அரசாங்கம் அமுலாக்க துடித்தது. ஆனால் எதிர்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பின காரணமாக அவற்றால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. பாராளுமன்ற மேலவையில் பாஜக கட்சிக்கு பெரும்பான்மை இல்லாததாலும், இடது சாரிகள் உள்ளிட்ட எதிர்கட்சிகள் வலுவாக எதிர்த்த காரணத்தாலும் அதனால் பாராளுமன்றத்தில் அந்த சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஆனாலும் மோடி அரசாங்கம் கொல்லைப்புற வழியாக அந்நிய நேரடி முதலீட்டை உயர்த்த தயங்கவில்லை. அவசர அவசரமாக ஒரு அவசர சட்டத்தின் மூலம் இது அறிவிக்கப்பட்டது. அதற்கு இந்திய ஜனாதிபதியும் ஒப்புதல் வழங்கி விட்டார். இந்திய நாட்டின் குடியரசு தினத்தன்று அமெரிக்க அதிபர் ஒபாமா வருவதற்கு முன் காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என்கின்ற அமெரிக்காவின் ஆணைக்கு மத்தியாரசு பனிந்து போகிறது

என்பதை இதன் மூலம் மிக மிக தெளிவாக புரிந்துக் கொள்ள முடியும். இந்திய நாட்டின் குடியரசு தின கொண்டாட்டங்களில் கலந்துக் கொள்ள மட்டுமே ஒபாமா இந்தியாவிற்கு வரவில்லை. அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காகவே அவர் வர உள்ளார் என்பதையே இந்த நிகழ்ச்சி தெளிவாக தெரிவிக்கிறது. காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 26 சதவிகிதத்திலிருந்து 49 சதவிகிதமாக உயர்த்தியதை BSNL ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன், அதனை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது.

**29.12.2014 மதிய நேர ஆர்ப்பாட்டத்தில் வலுவாக பங்கேற்போம்:- காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 26 சதவிகிதத்திலிருந்து 49 சதவிகிதமாக உயர்த்திய அவசர சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் எனக் கோரி அகில இந்திய காப்பீட்டு கழக ஊழியர் சங்கம் (AIIEA) 29.12.2014 அன்று மதிய நேர ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூவல் விட்டுள்ளது. அன்றைய தினம் அவர்களின் ஆர்ப்பாட்டத்தில் BSNL ஊழியர்கள் பெருந்திரளாக கலந்துக் கொண்டு இந்த அவசர சட்டத்தை திரும்பப்பெற வேண்டும் என்ற கோரிக்கைக்கு நமது ஆதரவை தெரியப்படுத்த வேண்டும் என தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.**

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**